19.09.2025

புதுக்கோட்டை ஜெ.ஜெ.கலை அறிவியல் கல்லூரியில் பாரதிதாசன் பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கு இடையான மகளிர் கபாடி போட்டிகள் 19.09.2025 இன்று துவங்கியது இப்போட்டிகளைக் கற்பக விநாயகா கல்விக் குழுமத் தலைவர் முனைவர் கவிதா சுப்ரமணியன் தொடங்கி வைத்தார். அவர்தம் தொடக்கவுரையில் வாழ்வில் விளையாட்டு ஓர் அங்கம் என்றும் தங்கள் வாழ்வு சிறக்க விளையாட்டில் சிறப்பாக செயல்பட்டு வெற்றி பெற வாழ்த்துக்களைக் கூறினார். ஜெ.ஜெ.கலை அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் ஐ பரசுராமன் வாழ்த்துரை வழங்கினார். அவர்தம் உரையில் விளையாட்டில் வெற்றி தோல்வி கட்டாயம் உண்டு. அதை சரிசமமாக எடுத்துக்கொள்ளும் மனப்பக்குவத்தைப் பெற்று விளையாடி வெற்றிபெற வேண்டும் என்றார்

இப்போட்டிகளில் பாரதிதாசன் பல்கலைக்கழக ஆளுமைக்குட்பட்ட தஞ்சாவூர், மன்னார்குடி, நாகப்பட்டினம், கும்பகோணம் ஆகிய பகுதிகளிலிருந்து 12 அணியினர் விளையாடுகின்றனர் ். இதில் வெற்றி பெறும் முதல் மூன்று அணியினா் திருச்சி கோலி கிராஸ் கல்லூரியில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெறும் முதல் மூன்று அணியினருடன் விளையாட வேண்டும் அதில் வெற்றி பெறும் அணியினர்க்கு பரிசுகள் வழங்கப்படும்.

இப்போட்டிகளில் சிறப்பாக விளையாடும் வீராங்கனைகள் தென்னிந்திய பல்கலைக்கழக அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்பர். இப்போட்டிகளுக்கான ஏற்பாடுகளை ஜெ.ஜெ.கலை அறிவியல் கல்லூரி உடற்கல்வித்துறைத் தலைவர் முனைவர் ஜெகதீஸ் பாபு மற்றும் அத்துறைப் பேராசிரியா்கள் செய்திருந்தனர்.